# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.91/2021

வாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

பெயர் ஜோதி வா.சா.–1

க/பெ.

கிராமம் தொழில்

தாலுகா அருப்புக்கோட்டை வயது

---

முதல் விசாரணை 02–03–2026.

நான் இந்த வழக்கின் 4 ம் வாதி. 1 ம் வாதி என் தாயார். 2,3,5 ம் வாதிகள் என் உடன்பிறந்தவர்கள். 6 ம் வாதி என் கணவர். 7 முதல் 10 வாதிகள் என் கணவரின் சகோதர, சகோதரிகள். வாதிகள் தரப்பு 1 வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக எனக்காகவும், மற்ற வாதிகளுக்காகவும் சேர்த்து தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை வாதிகள் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

(1) சீர்திரத்தம் செய்யப்பட்ட பிராது வரைபடம் அசல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(2) 23.01.1962 ம் தேதிய மாரியப்பதேவர் பெயரில் உள்ள கிரைய ஆவணம் சார்பதிவாளர் அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(3) 24.12.1982 ம் தேதிய மாரியப்பதேவர் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் ஆவண எண். 2642/1982 சார்பதிவக நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(4) 01.10.1984 ம் தேதிய சரஸ்வதி அம்மாளுக்கு மாரியப்பதேவர் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் ஆவண எண்.1841/1984 சார்பதிவக நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(5) 25.02.2011 ம் தேதிய ராஜ் என்பவரின் இறப்பு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(6) 29.03.2011 ம் தேதிய வாரிசு சான்றிதழ் நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(7) 23.04.2019 ம் தேதிய சரஸ்வதி அம்மாள் இறப்பு சான்றிதழ் இணையதள நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(8) 09.07.2019 ம் தேதிய சரஸ்வதி அம்மாளின் வாரிசு சான்றிதழ் இணையதள நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(9) 01.07.2019 ம் தேதிய 1 ம் பிரதிவாதி பொன்னுகலாவிடம் பெற்ற கிரைய ஆவணம் ஆவண எண்.3159/2019 சார்பதிவக நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(10) மின் கட்டண ரசீது எண்ணம் –5 அசல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(11) ராஜீ பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது எண்ணம் –2 அசல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(12) சரஸ்வதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது எண்ணம் –2 அசல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(13) நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(14) நீதிமன்ற ஆணையர் வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S